## 1.1 மறுப்பு அபிப்பிராயம்

சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பராயமொன்றை தெரிவிக்கவில்லை. எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

## 1.2 மறுப்புஅபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும்

கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

## 1.1 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் 12 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகாரசபை மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களில் காட்டியுள்ள ரூபா 21,728,717 ஆன நட்டக் கடன் நிதியேற்பாட்டிற்கு உரித்தாக்கிக் கொண்டிருந்த நிச்சயமானதொரு கணக்கீட்டுக் கொள்கையை வெளிப்படுத்தியிருக்கவில்லை. அவ்வாறே நியமத்தின் 47 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனமானது முன்னைய ஆண்டுகளுக்குரிய குறிப்பிடத்தக்க தவறுகளின் பொருட்டு, தவறு ஏற்பட்ட காலப்பகுதிக்கென சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒப்பீட்டுப் பெறுமதிகளை மீள வெளியிடுவதன் மூலம் கடந்த காலத்திற்கேற்றவாறு சீராக்கம் செய்ய வேண்டுமாயினும், அவ்வாறு நடவடிக்கை | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| | மேற்கொள்ளாது 2017 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 20,764,303 தொகையான முன்னைய ஆண்டின் சீராக்கம் உரிமை மூலதன மாற்றக் கூற்றில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறை அல்லாத சொத்துக்களது பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 213,675,861 கிரயமுடைய நிலையான சொத்துக்கள் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாகியிருந்த போதும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. அதற்கமைவான மதிப்பிடப்பட்ட வழுவானது 03 ஆம் இலக்க இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் மீளாய்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கிரயமுடைய நிலையான சொத்துக்கள் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாகியிருந்த போதும், தற்போதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் சொத்துக்களை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்புகளினதும் வட்டி வருமானம் ரூபா 3,269,229 ஆக இருந்த போதும், அது நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 11,897,204 ஆகக் காட்டப்பட்டமையால் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 8,627,975 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நிலையான வைப்பு வருமானம் ரூபா 2,821,082 ஆக இருந்த போதிலும், நிதி நிலைமை கூற்றில் அப்பெறுமதி ரூபா 13,630,190 ஆக காண்பிக்கப்பட்டமையால் பெறவேண்டிய வட்டி ரூபா 10,809,108 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நிலையான வைப்பு வட்டி வருமானம் சரியாக கணக்கிடப்பட்டு அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம், நிலையான வைப்பு மீதி ரூபா 40,398,589 ஆக இருந்த போதும், வங்கி மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் அம்மீதி ரூபா 37,483,793 ஆகியமையால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்புக்கள் ரூபா 2,914,796 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நிலையான வைப்புப் பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதாரச் சேவைக் கட்டண அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள பொருளாதாரச் சேவை வரி 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமை வாய்ந்ததாக இருப்பின் அதனைக் கொடுப்பனவு செய்ய வேண்டிய வருமான வரியில் கழித்துக்கொள்ள முடியாது எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும், 2013 ஆம் ஆண்டு முதலாக இருந்து வரும் ரூபா 679,535 ஆன பொருளாதார சேவைக் கட்டணம் பெற வேண்டிய வருமானாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | பொருளாதாரச் சேவை வரி சரியாக கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 844,352,325 தொகையான நடைமுறை வேலை உள்ளடக்கப்பட்ட வேலை பூர்த்தி செய்யப்பட்ட 21 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 779,914,195 ஆன சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக சொத்துக்களுக்குரிய பெறுமானத்தேய்வு ரூபா 19,497,854 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது, அவ்வாறே மீளாய்வாண்டிற்காக ஏனைய நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வும் ரூபா 29,065,594 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வுச் செலவினம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கை

| ிடயம் | | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி<br>ரூபா | அண்மித்த அறிக்கை களின் பிரகாரம் பெறுமதி<br>ரூபா | வேறுபாடு<br>ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| <u>அறவிடப்பட வேண்டிய மீதிகள்</u> | | | | | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | இனங்காத மீதிகளை இனங்கண்டு சரியாக கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (i) | இலங்கை கரப்பந்தாட்ட சங்கம் | 3,479,608 | 987,449 | 2,492,159 | | |
| (ii) | இலங்கை கிரிக்கட் | 13,953,845 | 13,573,845 | 380,000 | | |
| (iii) | இலங்கை மெய்வல்லுனர் விளையாட்டு சங்கம் | 1,903,798 | 121,358 | 1,782,440 | | |
| | | <u>19,337,251</u> | <u>14,682,652</u> | <u>4,654,599</u> | | |
| (iv) | ஊழியர் கடன் | 27,521,733 | 27,313,252 | 208,481 | | |
| (v) | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் | 1,758,165 | 0 | 1,758,165 | | |
| <u>செலுத்த வேண்டிய மீதிகள்</u> | | | | | | |
| (vi) | தனியார் கம்பனிக்கு செலுத்த வேண்டியவை | 3,118,902 | 3,832,044 | 713,142 | | |

### 1.5.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கணக்கீட்டு விடயங்களுக்கெதிரே சுட்டிக் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (i) | வியாபார கடன்பட்டோர் | 39,995,540 | 82 கணக்குகளுக்குரிய மீதி உறுதிப்படுத்தல் | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | போதியளவு மற்றும் போதிய கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |
| (ii) | வியாபார கடன்கொடுத்தோர் | 987,703 | காலப்பகுப்பாய்வு | | |
| (iii) | 400 மீட்டர் ஓட்டப் பாதைக்குச் செலுத்த வேண்டிய தொகை | 13,713,615 | மீதிகளது உறுதிப்படுத்தல் | | |
| (iv) | ஆர்.பிரேமதாச விளையாட்டரங்கு கையிருப்பு | 2,149,491 | பௌதீக மெய்மையாய்வு அறிக்கைகள் | | |

## 1.6 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 கிடைக்க வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 39,995,539 ஆக இருந்ததுடன் அதில் 01 ஆண்டிற்கு மேற்பட்ட 101 பழைய கடன்பட்டோர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 31,665,703 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும | அறவிடப்பட வேண்டிய பணத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளுக்கெனக் கொடுப்பனவு செய்ய வேண்டிய பெறுமதி சேர் வரி தொடர்பாக ரூபா 8,939,262 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், அவ்வரியை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கவோ அல்லது தீர்வு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | செலுத்தப்பட வேண்டிய பணத்தை விரைவில் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) 11 ஆண்டுகளாக கொழும்பு மாநகர சபைக்குச் செலுத்த வேண்டியுள்ள ரூபா 1,124,068 தீர்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | செலுத்தப்பட வேண்டிய பணத்தை விரைவில் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 371(2)(இ) | பெற்றுக் கொள்ளப்பட்ட முற்பணங்கள் செயற்பாடு முடிவுற்ற உடனே தீர்வு செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட்ட ரூபா 102,258 தொகையான முற்பணங்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | உரிய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்படுத்த வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்ட போதிலும் வங்கிக்கு சமர்ப்பிகக்ப்படாத 06 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 82,933 கூட்டுத்தொகையான 02 காசோலைகள் தொடர்பாக இப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | உரிய நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படுத்த வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணங்கள் 880 மற்றும் 891(1) | அதிகாரசபையின் காசுக்கு பொறுப்பாக செயற்படும் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அத்துடன் பிணைப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | உரிய நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படுத்த வேண்டும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | அதிகாரசபையின் 15 வாகனங்களுக்காக 2013 ஆண்டின் பின்னர் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் எரிபொருள் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | உரிய நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படுத்த வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 80,179,897 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை 154,960,050 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 74,780,153 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த இந்த வீழ்ச்சி குறைவடைவதற்கு செயற்பாட்டு வருமானம் ரூபா 18,321,994 ஆல் அதிகரித்தமை மற்றும் அரச மானியங்கள் ரூபா 58,940,000 ஆல் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது நடைமுறை விகிதம் 1.55 முதல் 2.42 வரை அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் அதிகாரசபையின் குறுங்கால பொறுப்பு தீர்ப்பனவு இயலுமை முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் தொழில்நுட்பம், திட்டமிடல், ஊடகம், மின் இயந்திர மற்றும் மதியுரை பிரிவுகளில் சிரேஷ்ட மட்டத்தில் 05 வெற்றிடங்கள் உட்பட மொத்தம் 76 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு அதிகாரசபை தவறியிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 3.2 ஏனைய அமைப்புக்களுக்குரிய வளங்களை பயன்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| 02 வெளி நிறுவனங்களுக்குரிய மோட்டார் வாகனமொன்றும் பிணியாளர் வண்டி யொன்றையும் முறைப்படி கையேற்காமல் அதிகாரசபையின் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | சொத்துக்களை முறையாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் II ஆம் பிரிவின் 8(1) பிரிவின் பிரகாரம் அடுத்த நிதியாண்டு ஆரம்பமாவதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் பாதீடொன்று தயாரித்து அதனை அதிகாரசபையின் நிர்வாக சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பித்த பாதிடப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 15 வருமான விடயங்களுக்குரியதாக 14 சதவீதம் முதல் 133 சதவீதம் வரையிலும் 20 செலவின விடயங்களில் 12 சதவீதம் முதல் 608 சதவீதம் வரையான வீச்சில் விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடானது வினைத்திறனானதொரு முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டது | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | பாதீட்டு மதிப்பீடு சரியாக தயாரிக்கப்பட்டு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட வேண்டியதுடன் விலகல் தொடர்பாக உரிய நேரத்தில் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். |